[1994 நவம்பர் 10

முற்பகல் 11-55

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போது திரு. பழனிசாமி தன்னுடைய கவனத்தை வேறு எங்கோ திருப்பிக்கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். நான் உறுதியாகச் சொல்லியிருக்கிறேன். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் 33 (அ) பிரிவைப் பயன்படுத்தி இந்த ஆலை இயங்குவது இன்றுமுதல் நிறுத்தப்படும் என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொன்னார்களா, இல்லையா? (குறுக்கீடு) விவர அறிக்கையில் இல்லை என்றால், செல்வி சுலோசனா அவர்கள் கேட்டதற்குப் பதில் சொன்னார்கள் அல்லவா? (குறுக்கீடு) உங்களுடைய கவனமே இப்போது கொஞ்ச நாட்களாக ரொம்பவும் சிதைந்துபோய் இருக்கிறது. ரொம்பவும் சிதைந்து பலவாறாகப் போவதால் ஒருநிலைப்படுத்தி இருங்கள்.

(ஆ) வால்பாறை தாலுகா, காரமலை டீ மற்றும் புராடியூஸ் கம்பெனித் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்படாததால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தாலுக்கா, காரமலை டீ மற்றும் புராடியூஸ் கம்பெனித் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு போனஸ் வழங்கப் படாததால் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

1994 நவம்பர் 10] [திரு. ஏ. எம். பரமசிவன்]

அறிக்கை

வால்பாறையில் உள்ள 'தி பெரிய காரமலை டீ மற்றும் புராடியூஸ் கம்பெனி' தோட்ட நிறுவனத்தில மொத்தம் 4,550 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் 3,750 தொழிலாள்ர்கள் நிரந்தரம் செய்யப்பட்டவர்கள் மற்ற 800 தொழிலாளர்கள் தற்காலிகமாகப் பணியாற்றுபவர்கள். மத்தியத் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட 14 தொழிற் சங்கங்கள் இயங்குகின்றன.

1993-94ஆம் ஆண்டிற்கு வரவு-செலவுக் கணக்குப்படி தொழிலாளர்கள் 8.33% போனஸ் தான் பெறத் தகுதியுடையவர்கள் எனவும், அதனால் 1993-94ஆம் ஆண்டிற்கு 8.33% போனஸ் அளிக்கப்படும் என நிர்வாகத்தினர் தெரிவித்ததைத் தொடர்ந்து தொழிலாளர்கள் 20% போனஸ் கோரி பணி சுணக்கத்தில் (Go slow) 25-10-94 முதல் ஈடுபட்டதாகவும் 25-10-94-க்கு முன்னுள்ள வாரத்தில் 40,253 கிலோ தேயிலை பறிக்கப்பட்டதாகவும், 25-10-94 முதல் 31-10-94 வரை 27,330 கிலோ தேயிலை தான் பறிக்கப்பட்டுள்ளது எனவும் நிர்வாகம் தெரிவித்ததாகவும் தெரிய வருகிறது. தொழிலாளர்கள் தரப்பில் நிர்வாகத்தின் கூற்று மறுக்கப்பட்டுள்ளது.

இது குறித்த தொழிற் தாவாவில் கோவை, தொழிலாளர் துணை ஆணையர் முன்பு சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

பேச்சு வார்த்தைகளின் போது தொழிற்சங்கங்கள் 1993-94ஆம் ஆண்டிற்கு 20% போனஸ் அளிக்க வேண்டும் என கோரிக்கை எழுப்பினாலும் நிர்வாகத்தினர் 8.33% மட்டும் தான் தர இயலும் எனத் தெரிவித்ததாகவும், பிடித்தம் செய்யத்தக்க பண்டிகை முன்பணம் வேண்டுமானாலும் அளிக்கத் தயார் என நிர்வாகத்தினர் தெரிவித்ததாகவும் இதனை தொழிற்சங்கங்கள் ஏற்கவில்லை எனவும், போனஸ் மற்றும் கருணைத் தொகை 20 சதவிகிதம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியதாகவும் தொழிலாளர்களுக்கு கூடுதல் போனஸ் வழங்க நிர்வாகத்தினருக்கு கோவை, தொழிலாளர் துணை ஆணையர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். 1993-94 ஆம் ஆண்டுக்கான காரமலை தேயிலைத் தோட்ட நிறுவனத்தினுடைய வரவு-செலவுக் கணக்கில் இலாபம் இருக்கிறது என்று நிர்வாகமே ஏற்றுக் கொண்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் 1993-94-ஆம் ஆண்டு கடந்த ஆண்டைவிட, அதற்கு முந்தைய ஆண்டுகளைவிட தேயிலை உற்பத்தி எந்தக் கோணத்திலும் குறையவில்லை என்ற காரணத்தால் போனஸ் கொடுக்க இயலும். ஆனால் வரவு-செலவுக் கணக்கை வேண்டுமென்றே 'இன்ஃப்ளேட்' செய்து இருக்கிற காரணத்தால் தமிழக அரசு தலையிட்டு எப்போதும் உள்ள அளவுக்கு தேயிலைத் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளி ஏற்றுகிற வகையில் 20 சதவிதம் போனஸ் வழங்குவதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறைத் தாலுக்கா காரமலை டீ மற்றும் புராடியூஸ் கம்பெனி இலாபத்தின் அடிப்படையில் முந்தைய 4 ஆண்டுகளில் 20 விழுக்காடு போனஸ் வழங்கியுள்ளது. ஆனால் 1993-94 ஆம் ஆண்டின் இலாபக் கணக்குபடி 8.33 விழுக்காடுக்கும் குறைவாகத்தான் போனஸ் கொடுக்க இயலும் என்றும், எனினும் குறைந்தபட்ச போனஸ் 8.33 விழுக்காடு கொடுப்பதாகவும் நிர்வாகம் தெரிவிக்கிறது. இதைத் தொழிலாளர்கள் ஏற்கவில்லை. எனவே, தொழிலாளர்களுக்கு கூடுதல் போனஸ் வழங்க இயலுமா என்பதைப் பரிசீலனை செய்ய கோவை மாவட்ட தொழிலாளர் நல துணை ஆணையாளர் நிறுவனம் மற்றும் தொழிற்சங்கங்களுடன் 9-11-94 அன்று பேச்சுவார்த்தை நடத்தினார். ஏற்கும்படியான முடிவு ஏற்படாததால் கோவை தொழிலாளர் இணை ஆணையாளர் 11-11-94 அன்று பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். இந்த நிறுவனத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் எதுவும் செய்யவில்லை. விதிப்படி வேலை என்ற முறையில் வேலை செய்துகொண்டு இருக்கின்றனர். ஆகவே இந்தப் பிரச்சினைக்குரிய கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரமலை தோட்ட நிறுவனம் போன்று உள்ள டாட்டா நிறுவனம், டீ எஸ்டேட் ஆஃப் இண்டியா நிறுவனம், டி.பி.டி.சி. நிறுவனம் போன்ற நிறுவனங்கள் எல்லாம் ஏற்கனவே 20 சதவித போனஸ் வழங்கிவிட்டன. அந்த நிறுவனங்களுக்கெல்லாம் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படுகிற உற்பத்திச் செலவு தான் இந்த நிறுவனத்திற்கும் ஏற்படுகிறது. ஆனால் கணக்குகளைப் பார்க்கிற போது இந்தக் காரமலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கோ தொழிலாளர் நல ஆணையத்திற்கோ இந்த நிறுவனம் எத்தகைய செலவும் செய்யவில்லை. தொழில் உற்பத்திக்கும்,

1994 நவம்பர் 10] [டாக்டர் அ. ஸ்ரீதரன்]

தொழிலாளர் நலனுக்கும் மாறாக செலவுகளைச் செய்து அந்தச் செலவுகளை ஆண்டு அறிக்கையில் சமர்ப்பித்து இருக்கிறார்கள். எனவே இதை ஏற்றுக்கொள்ள முடியாது. தொழிலாளர்களின் மிகப் பெரிய பிரச்சினை இது. நாம் இதைக் கவனமாகத் தீர்க்கவில்லை என்றால் அடுத்த ஆண்டு சற்றேறக்குறைய 50,000 தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய மிகப் பெரிய பிரச்சினையாக பொதுமக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நானும் கோவை மாவட்டத்தின் தொழிலாளர் நல ஆணையரும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறைக் கண்காணிப்பாளரும் தொழிலாளர்கள் மத்தியில் பேசி அமைதியான முறையிலே இருங்கள், தமிழக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையின் கீழ் சிறப்பான ஒரு முடிவை எடுக்கும் என்று சொல்லி தொழிலாளர்களை அமைதிப்படுத்தி வைத்திருக்கிறோம். எனவே மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, எந்தவகையிலும் அந்தக் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்படவில்லை, லாபத்தில்தான் இருக்கிறது என்று அந்த நிறுவனமே ஒத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தைக் கருதி, அந்த நிறுவனத்தின் செலவுகளைக் குறைத்து ஒரு வார காலத்தில் அல்லது ஒரு மாத காலத்திற்குள் 20% போனஸ் மற்ற நிறுவனங்கள் கொடுத்தது போல் கொடுக்கச் செய்வதற்கு விரைவான ஆணையைப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

நண்பகல் 12–00

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளையதினம் நடைபெற இருக்கின்ற பேச்சு வார்த்தையில் கோவை தொழிலாளர் இணை ஆணையர் நல்ல முறையில் பேச்சுவார்த்தைகளை முடிப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி